பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 14 | வியாழக்கிழமை | 27.06.2024 | அதிர்வு 331

## சட்டமா அதிபரின் பதவிக் கால நீடிப்பு பரிந்துரை நிராகரிப்பு



சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங் களுக்கு 09



### இலங்கை எனும் குழந்தையை

# ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்து வந்துள்ளேன்

## ஜனாதிபதி ரணில் விசேட உரை

+குழந்தையைக் காப்பாற்ற ஆதரவளிக்காத குழுக்கள் இன்று குழந்தையின் உரிமையைப் பெற போராடுகின்றன.

+வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் இலங்கை அடைந்துள்ள வெற்றி நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் கிடைத்திருக்கும் ஒரு நற்செய்தி.

+சிலர் ஜனாதிபதிப் பதவிக்காகப் பாடுபடும்போது, நான் நாட்டுக்காகப் பாடுபடுகின்றேன்.

+பாதை தவறினால் ஏற்படும் ஆபத்துகளை நாம் அனைவரும் அறிவோம். சரியான முடிவை எடுக்க மக்களுக்கு உரிமை உள்ளது.

+எந்த நிபந்தனையுமின்றி நாட்டைப் பொறுப்பேற்கையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையும் வேலைத்திட்டமும் மட்டுமே என்னிடம் இருந்தது.

+அண்மைய வரலாற்றில், உலகில் எந்த ஒரு நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தகைய தனித்துவமான வெற்றியைப் பெற்றதில்லை.

+இந்தப் பயணத்தை சீர்குலைக்க முயன்றவர்கள் எதிர்காலத்தில் ஒரு நாள் நாட்டுக்குத் துரோகம் செய்ததற்காக தங்கள் குழந்தைகள் முன் அவமானப்படுவர்.

ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கைத் தாய்த் திருநாடு எனும் குழந்தையைப் பாதுகாப்பாக அழைத்து வந்துள்ளேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 05

## இரு தரப்பு கடன் மறுசீரமைப்பு உடன்பாடு: வெற்றிகரமாக நிறைவு செய்தது இலங்கை



இலங்கை நேற்று முற்பகல் பரிஸ் நகரில் தனது முக்கிய உத்தியோக பூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்களு டன் கடன் மறுசீரமைப்பு பேச்சுகளை நிறைவு செய்துள்ளதுடன் உத்தியோக பூர்வ கடன் வழங்குநர் 09




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு ஆற்றிய உரையை அவதானித்த போது எனக்கு மனதுக்குள் சிரிப்புதான் வந்தது.

“சிலர் பதவிக்காக பாடுபடும் போதும், நான் நாட்டுக்காகப் பாடுபடுகிறேன்!” – என்ற சாரப் பட ஜனாதிபதியின் உரை அமைந்தது.

ரணில் நேரடி அரசியலுக்கு வந்து ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாகின்றன. இந்த ஐம்பது ஆண்டுகளில் 48 ஆண்டுகள் அவரும் இந்த பதவிக்கு வரத்தான் பாடுபட்டார். நாளை அவரது இடத்துக்கு வரப் போகின்றவர்கள் இன்று அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் குறை கூற ஒன்றுமே இல்லை.

அவர்கள், ரணில் இப்போது 09



# 1,700 ரூபா சம்பளம் தொடர்பான மனு மீது விசாரணை ஒத்திவைப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பள அதிகரிப்பு வர்த்தமானியை சவாலுக்குட்படுத்திய மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவற்றதாக்கி எழுத்தாணை கட்டளை பிறப்பிக்குமாறு கோரி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தன.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிபதி சோபித்த ராஜகருணா முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செயற்படுத்தினால், தற்போதும் நட்டத்தில் இயங்கும் தமது தோட்ட நிறுவனங்கள் முழுமையாக செயலிழக்கும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடாது, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அதனை செல்லுபடியற்றதாக்குமாறும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தொழில் அமைச்சின் செயலாளர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் அமுல்படுத்தப்படுவதைத் தடுத்து, இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்காதிருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழில் ஆணையாளர் நாயகம் ஜயசுந்தர, தொழில் அமைச்சின் செயலாளர் குணவர்தன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 52 பேர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.




# தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது நம் மக்களைப் பின் தள்ளும் நடவடிக்கை

## திலீபன் எம்.பி. வவுனியாவில் கருத்து

(கே.வசந்தன்)

பொது வேட்பாளரை நிறுத்துவது மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும் பின்னுக்கு கொண்டு கொண்டு செல்லும் ஒரு செயற்பாடு என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் பேரம் பேசும் சக்தியாக மாற வேண்டும் எனில் யார் ஜனாதிபதியாக வரப் போகிறாரோ அல்லது அந்தப் போட்டியில் யார் முன்னிலையில் உள்ளாரோ அவருடன் தான் பேரம் பேச முடியும். சம்பந்தமில்லாதவருக்கு ஆதரவு அளிப்பது எமக்கு இழப்புதான். அது ஆரோக்கியமானது அல்ல.

ரணில் விக்கிரமசிங்க, சஜித், அனுர ஆகியோர்தான் இந்த போட்டியில் உள்ளனர். அவர்களுடன் பேசி அல்லது அதில் வெல்லக் கூடியவருடன் பேசித்தான் நாம் எமக்கானவற்றை பெற வேண்டும். அதை விடுத்து பொது வேட்பாளர் என்பது தேவையற்ற விடயம். பொது வேட்பாளர் என ஒருவரை நிறுத்துவது எமது மக்களையும், அவர்களது அபிவிருத்தியையும் இன்னும் பின்னுக்கு கொண்டும் செல்லும் செயற்பாடு எனத் தெரிவித்தார்.

## இந்திய மீனவர்களுடனான மோதலில்

# உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் இறுதி நிகழ்வில் யாழ். மீனவர்கள்

## மூன்று பஸ்களில் குருநாகல் பயணம்



(ந.லோகதயாளன்)

யாழ். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் இறுதி நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மீனவர்கள் பயணிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை காங்கேசன்துறைக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய இந்திய மீனவர்களைக் கைது செய்ய முற்பட்ட வேளை இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த காங்கேசன்துறை கடற்படை முகாமில் விசேட படகுகள் அணியில் கடமையாற்றும் ரத்நாயக்கவின் (வயது 40) இறுதி நிகழ்வு இன்று வியாழக்கிழமை குருநாகலில் இடம்பெறுகின்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கடற்படைச் சிப்பாயின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தவே யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து 3 பஸ்களில் மீனவர்கள் பயணிக்கின்றனர்.

# கடத்தப்பட்ட நபர் 24 நாட்களுக்குப் பின்னர் வெட்டுக்காயங்களுடன் பொலிஸில் சரண்

## கிளிநொச்சியில் நேற்று பரபரப்பு








கிளிநொச்சியில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளான நிலையில் 24 நாட்களின் பின் பொலிஸாரிடம் சரணடைந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சிங்கராஜன் ஜெயக்குமார் என்பவர் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று புதன்கிழமை காலை, காணாமல்போனார் என்று தேடப்பட்ட மேற்படி நபர் வெட்டுக்காயங்களுடன் அடைத்து வைத்திருந்த வீட்டிலிருந்து தப்பிச் சென்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

தன்னை ஒரு கும்பல் கடத்தி வைத்து சித்திரவதை செய்தது என்று அவர் வாக்குமூலம் அளித்ததுடன், அந்தக் கும்பல் வெவ்வேறு இடங்களுக்குத் தன்னை மாற்றி சித்திரவதை செய்தது என்றும் தெரிவித்துள்ளார்.

சரணடைந்த நபரை அவர் தப்பி வந்த வீட்டுக்கு அழைத்துச் சென்ற பொலிஸார் சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன், தடயவியல் சான்றுகளையும் பெற நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

வெட்டுக்காயங்களுடன் பொலிஸாரிடம் சரணடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# மீசாலை வடக்கு மக்கள் நேற்றையதினம் ஆளுநரின் செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

## தட்டாங்குளம் வீதியை புனரமைத்துத் தரக் கோரி

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியினை புனரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்த வீதியைப் பயன்படுத்தும் 5 கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஐந்து வருடங்களாக புனரமைக்கப்படாத இந்த வீதியை தினசரி சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்துகின்ற போதிலும் மிக மோசமான நிலையில் வீதி பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரவிக்கின்றனர்.

மூன்று மணித்தியாலங்களுக்கும் மேலாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஐவர் ஆளுநரின் செயலாளரைச் சந்தித்தனர். ஆளுநரின் ஊடாக ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது.




# யாழ். வலயக் கல்வி பணிப்பாளரின் அலுவலக அறையிலிருந்து சுவாமிப் படங்கள் அகற்றல்!

## கல்விச் செயலர் தலையிட்டமையால் சுமுகத் தீர்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி பணிப்பாளரின் அலுவலகத்தில் நிரந்தரமாகத் வைக்கப்பட்டு, பூசித்து வரப்பட்ட சைவ சமய தெய்வப் படங்கள் புதிதாகப் பதில் பணிப்பாளர் கடமையக் கவனிக்க வந்த கிறிஸ்தவ அதிகாரியினால் அங்கிருந்து அகற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் மத சார்பான அதிருப்தி நிலையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் கல்வி வலய அலுவலகத்தில் ஒன்றரை தசாப்தங்களுக்கும் மேலாக பூசித்து வரப்பட்ட சுவாமிப் படங்களே இவ்வாறு நேற்றைய தினம் ஒரே நாளில் தற்போதைய பதில் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லியினால் அகற்றப்பட்டன எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியில் இதுவரைக் கடமையாற்றிய அரிச்சந்திரன் கடந்த 19ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் சென்றார்.

அதனால் ஏற்பட்ட யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வெற்றிடத்திற்கு தற்போதைய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரான பிறட்லி பதில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பதில் கடமையாற்ற வந்த சமயத்திலேயே சைவ அடையாளங்களை அவர் அகற்றினார் எனக் குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் யாழ் வலயப் பதில் கல்விப் பணிப்பாளரான கே.ஜே.பிறட்லியிடம் கேட்டபோது –

எந்தவொரு மத அடையாளத்தையும் அகற்றுவது என் எண்ணமல்ல. இருந்தபோதும் ஒரு மத அடையாளம் மட்டும் இருப்பதனை ஏற்க முடியாது என்ற கருத்திலேயே நான் செயற்பட்டேன். இருந்தபோதும் பழைய நிலைமை அப்படியே பேணப்பட வேண்டும் என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் ஓர் அறவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அது நடைமுறைப்படுத்தப்படும்."" – என்றார்.

இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இந்த விடயம் தொடர்பாக இன்று (நேற்று) மாலை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையில் இதுவரை நாளும் எத்தனை சுவாமிப் படங்கள் எந்த அளவில் இருந்தனவோ அவை உடனடியாக அதே இடத்தில் வைக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ஜே. பிறட்லிக்கு கண்டிப்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்றார்.




## ஆபத்தான தொங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“இலங்கையின் பிரதான உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இன்று (நேற்று) கடன் மறுசீரமைப்பு பேச்சுகளை நிறைவு செய்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் இறுதி உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இன்று (நேற்று) பீஜிங்கில் இறுதி உடன்பாடு எட்டப்பட்டதோடு அது அதற்கான முறையான நடைமுறைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் இது நற்செய்தி என்று தெரிவித்த ஜனாதிபதி, சிலர் ஜனாதிபதிப் பதவிக்காகக் கடுமையாகப் பாடுபடும் நிலையில் தான் நாட்டுக்காகப் பாடுபட்டு வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் தமக்குக் கிடைக்கும் பதவிகளைப் பற்றிக் கனவு காணும்போது, தான் நாட்டின் அபிவிருத்தியைப் பற்றிக் கனவு காண்கின்றார் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றும்போதே மேற்படி விடயங்களைக் குறிப்பிட்டார்.

அன்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் இலங்கைத் தாயை ஆபத்தான தொங்கு பாலத்தின் ஊடாக கொண்டு வர முடிந்தது என்று தெரிவித்த ஜனாதிபதி, ஹுனு வட்டயே நாடகத்தில் வருவதைப் போன்று கடினமான நிலைமையில் குழந்தையைப் பாதுகாப்பதற்கு அஞ்சி எந்த ஆதரவையும் வழங்காத தரப்பினர், குழந்தை தொங்கு பாலத்தைக் கடக்கும் முன்பே குழந்தையின் உரிமையைக் கேட்டு போராடுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

கடனைச் செலுத்த முடியாமல் வங்குரோத்தான நாடென்று முத்திரை குத்தப்பட்ட ஒரு நாடு இரண்டு வருடங்களில் இந்தளவு முன்னேற்றத்தைப் பெற முடிந்திருப்பது வெற்றி என்றும், அண்மைய வரலாற்றில் பொருளாதார படுகுழியில் விழுந்த உலகின் எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வாறான நிலையை அடைந்ததில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

“நாடு எதிர்நோக்கும் சவால்களை உண்மையாகப் புரிந்து கொண்டு அவருக்கு நடைமுறைத் தீர்வுகளை வழங்கி, முடிவுகளைக் காட்டிய என்னுடன் சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வீர்களா? இல்லையேல் இன்னும் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாத மற்றும் அதிகாரத்துக்காக இருட்டில் தடவிக் கொண்டிருக்கும் குழுக்களுடன் இணைவதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” – என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தவறான பாதையில் செல்வதால் ஏற்படும் ஆபத்துக்களை அனைவரும் அறிந்துவைத்துள்ளதால், அது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கு மக்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருக்கின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்கள் எடுக்கும் தீர்மானம் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது என்றும், அது நாடு மற்றும் எதிர்கால குழந்தைகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வங்குரோத்து அடைந்து நாட்டின் பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்பதற்கு தனது கட்சிக்கு நாடாளுமன்ற அதிகாரம் இருக்கவில்லை என்றும், தன்னால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகளோ தான் நியமித்த அமைச்சரவையோ இருக்கவில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவை எதுவும் இன்றி உலகையே ஆச்சரியப்படுத்தும் விதத்தில் இரண்டு வருடங்களில் நிலையான நாட்டை கட்டியெழுப்ப தன்னால் முடிந்தது என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை வருமாறு:–

“நமது நாட்டின் அண்மைய வரலாற்றில் இன்று மிக முக்கியமான நாள். இந்நாள் ஒரு தனித்துவமான மைல்கல்.

கடந்த காலத்தில் நாம் பாடுபட்ட பணிகளுக்கான நல்ல பலன்கள் தற்போது நமது நாட்டுக்குக் கிடைத்துள்ளன.

இன்று முற்பகல் பெரிஸ் நகரில் இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுவார்த்தைகள் நிறைவு செய்யப்பட்டு, கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாட்டை எட்ட முடிந்தது.

அதேபோல் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இன்று நாம் பீஜிங் நகரில் இறுதி இணக்கப்பாட்டினை எட்டினோம். அதற்கு அமைவான உரிய செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை உண்மையிலேயே நேசிப்பவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும்.

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இவ்வகையான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். விரிவாக பேச்சுவார்த்தை நடத்தினோம். கடந்த காலத்தில் நாம் பெற்ற பொருளாதார வெற்றிகள் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் எமக்குப் பெரும் பலமாக இருந்தது.

இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியடைய, எமது கடன் வழங்குநர்களான சீனா மற்றும் சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவில் இணைத்தலைமை

தொடர்ச்சி▼

# ஆபத்தான தொங்கு...

தொடர்ச்சி▲

வகிக்கும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களும், பெரிஸ் கழகத்தின் செயலகமும் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், எமக்கு ஆலோசனை வழங்கிய லஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ்)அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் .

இந்த ஒப்பந்தங்களின் மூலம், வெளிநாடுகளின் உள்ள அனைத்து இருதரப்பு கடன் தவணைகளையும் 2028 ஆம் ஆண்டுவரை

ஒத்திவைக்க முடியும். அதன்பிறகு, சலுகை நிபந்தனைகள் அடிப்படையில் அனைத்து கடன்களையும் செலுத்த 2043 வரை நீண்டகால அவகாசம் கிடைக்கும்.

2023 ஆம் ஆண்டில் நாம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்துள்ளோம்.இப்போது வெளிநாடுகளின் இருதரப்புக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்ய முடிந்தது. அடுத்ததாக வெளிநாட்டு பிணைமுறி உரிமையாளர்களை உள்ளடக்கிய வணிகக் கடன் வழங்குநர்களுடன் ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும். இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலம், அதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம்.

இன்று நாம் எட்டியுள்ள இணக்கப்பாடுகளால், நமது பொருளாதாரத்திற்கு சுவாசிக்க அவகாசம் கிடைக்கிறது. 2022ஆம்ஆண்டில்,மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2வீதத்தினை, வெளிநாட்டுக் கடனை செலுத்துவதற்கு செலவிட வேண்டியிருந்தது.2027 முதல் 2032 வரையான இடைப்பட்ட காலத்தில் கடன் செலுத்துவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5மூ இற்கும் குறைவான தொகையையே ஒதுக்குவதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளது.

2022 இல் அரசாங்கத்தின் வருடாந்த நிதித் தேவை, மொத்த தேசிய உற்பத்தியில் 34.6 சத வீதமாகும் . இந்த இணக்கப்பாடுகள் காரணமாக 2027-2032 வரையான காலப் பகுதியில் அந்த நிதித் தேவை 13 சதவீதத்தை விடக் குறையும்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கை கடன் செலுத்த முடியாத நாடு என்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.அந்த அறிவிப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் எங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திவிட்டன. வங்குரோத்து அடைந்த நாட்டுடன் நிதி உறவுகளைப் பேணுவதற்கு எந்தவொரு நாடும் முன்வராது, கடன்களை வழங்காது. குறைந்த பட்சம் கடன் பத்திரங்களைக்கூட ஏற்றுக்கொள்ளாது.

இந்தப் பின்னணியில் வெளிநாட்டுக் கடன் உதவியோடு நம் நாட்டில் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அந்த நாடுகள், தங்கள் திட்ட அலுவலகங்களை மூடிவிட்டு தத்தமது நாடுகளுக்குச் சென்றன. அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் முடங்கின.

ஆனால் இப்போது கடன் மறுசீரமைப்புப் பணியின் முக்கியமான கட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி முன்னெடுத்த அனைத்து திட்டங்களையும் மீண்டும் தொடங்க அந்தந்த நாடுகளுக்கு சட்டபூர்வ வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி, இலகு ரயில் பாதை, அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட பல திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அது மாத்திரமன்றி பல புதிய அபிவிருத்தித் திட்டங்களை எமக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள் எங்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதால், நமது நாட்டின் மீதான சர்வதேச நம்பிக்கை மேலும் அதிகரித்து வருகிறது. இது ஒரு வகையான சர்வதேச அங்கீகாரமாகும். எமது கடன் பத்திரத்தைக் கூட ஏற்றுக்கொள்ளாத சர்வதேச சமூகம் தற்போது எமக்கு நம்பிக்கைச் சான்றிதழை வழங்கும் நிலைக்கு வந்துள்ளது.

எனவே இன்று நாம் இணக்கப்பாட்டிற்கு வந்த இந்த இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த உடன்படிக்கைகளை பிரதமர் அவர்கள், ஜூலை 2ஆம் திகதி நடைபெறும் விசேட நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பார். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரையும் அந்த ஒப்பந்தங்களை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இதுவரை எளிதான பயணத்தை கடந்துவரவில்லை. கடந்த காலங்களில் நாம் மிகக் கடினமான, கஷ்டமான பாதையைக் கடந்துவந்தோம். இந்தப் பணிக்காக நமது அமைச்சர்களும், அதிகாரிகளும் கடுமையாக உழைத்தனர். நமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பொறுமையுடன் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். நாங்கள் அனைவரும் வெவ்வேறு சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொண்டோம். இன்னமும் எதிர்கொள்கின்றோம்.

இந்த முன்னேற்றத்தை சீர்குலைக்க சிலர் முயன்றனர், இன்னும் முயல்கின்றனர். ஆனால் அவர்களால் இந்தப் பயணத்தை நிறுத்த முடியவில்லை. இவர்கள் எதிர்காலத்தில் ஒருநாள், நாட்டைக் காட்டிக் கொடுத்தமைக்காக, தங்களின் பிள்ளைகளின் முன்னால் வெட்கப்பட நேரிடும்.

பொருளாதாரம் வலுப்பெறும் போதெல்லாம், நாம் சலுகைகளை வழங்கினோம். பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டன. எதிர்காலத்திலும் அந்நிலைமை தொடரும். சரியான பாதையில் பயணித்தால், பொருளாதாரம் வலுப்பெறும்போது, தற்போதைய கஸ்டங்களை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம். வேலை நிறுத்தங்களாலும், அச்சுறுத்தல்களாலும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம், எங்களுக்கு தீர்வுகளும், நிவாரணங்களும் கிடைக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாங்கள் மிகவும் கடினமான பாதையில் செல்ல வேண்டியிருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். இந்தப் பிரச்சினைகளை ஒரு வாரத்தில், இரண்டு, மூன்று, நான்கு மாதங்களில் அல்லது ஒரு வருடத்தில் தீர்க்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

'ஹுனுவட்டயே' நாடகத்தை மேற்கோள்காட்டி, அடிவாரம் தெரியாத, பயங்கரமான பாதாளத்தின் மேலாக அமைக்கப்பட்ட தொங்கு பாலத்தை நாம் கடக்க நேரிடும் என்பதை வலியுறுத்தினேன்.

அப்போது நம் நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் இருந்தது. அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற பலர் முன்வரத் தயங்கினர், பயந்தனர். 'செய்யாத சிகிச்சைக்கு சிறு-தேன் ஔடதம் தேடுவதைப் போல' ஒவ்வொரு காரணங்களைக் கூறி தப்பிக் கொள்ள முயன்றனர்.முழு ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்தால் நாட்டைப் பொறுப்பேற்பதாக ஒரு தரப்பு கூறியது. அமைச்சரவைக்கு தங்களுடைய ஆட்களை நியமிக்க அனுமதித்தால் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக மற்றொரு குழுவினர் தெரிவித்தனர். இன்னும் சிலர் ஜனாதிபதி பதவியை வழங்கினால் ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

ஆனால் எந்த நிபந்தனையும் இல்லாமல் இந்த சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். பொருளாதாரப் படுகுழியில் இருந்து நம் நாட்டையும், நம் நாட்டு மக்களையும் காப்பாற்றும் வலிமை எனக்கு இருந்தது. என்னிடம் வேலைத்திட்டம் இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலைகளில் இருந்து நாடுகள் வெளிவருவதற்கான வழிகளைப் பற்றிய புரிதலும் அனுபவமும் எனக்கு இருந்தது. திட்டமிட்ட கொள்கைகள் மற்றும் அர்ப்பணிப்புடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதற்காக சர்வதேச ஆதரவைப் பெற முடியும் என்பதையும் அறிந்திருந்தேன்.

அவைதான் என்னிடம் இருந்தன. எனக்கென்று எம்.பி.க்கள் இருக்கவில்லை. எனக்கென்று ஒரு அமைச்சரவை இருக்கவில்லை. எனக்கென்று ஒரு அரசாங்கம் இருக்கவில்லை. ஆனால் நான் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

"பெருமை பேசுவதை விட்டுவிட்டு செயலில் இறங்குவதே ஒரு பணியை ஆரம்பிப்பதற்கான சரியான வழி!" என்று உலகப் புகழ்பெற்ற படைப்பாளி வால்ட் டிஸ்னி சொன்ன கூற்று நினைவுக்கு வந்தது. பயமின்றி செயலில் இறங்கினேன்.

2022 ஆகஸ்ட் 3 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் ஆரம்ப உரையின்போது, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பின்பற்ற வேண்டிய நான்கு அம்சக் கொள்கைகளை நான் நாட்டுக்கு முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,

தொடர்ச்சி▼

# ஆபத்தான தொங்கு...

தொடர்ச்சி▲

2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான டுயணயசன மற்றும் ஊடகைகழசன ஊாயஉந ஆகியோருடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,

3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,

4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

ஆகிய நான்கு அம்சக் கொள்கைகளை அன்று முன்வைத்தேன்.

அன்று நான் குறிப்பிட்ட வேலைத்திட்டம் குறித்தும், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் முன்வைத்தேன். இதை நாங்கள் இரகசியமாகச் செய்யவில்லை. அனைத்தும் வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்பட்டன.

நான்கு அம்சக் கொள்கைகளில் முதல் மூன்று விடயங்களும் இப்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நமது வேலைத்திட்டமும் நாம் கடந்து வந்த பாதையும் சரியானவை என்பதை இது நிரூபிக்கிறது.

கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து முத்திரை குத்தப்பட்ட நாடு என்ற வகையில், இரண்டே ஆண்டுகளில் இந்த மாதிரியான முன்னேற்றத்தை எட்ட முடிந்ததே பாரிய வெற்றியாகும். இவ்வாறு பொருளாதார படுகுழியில் விழுந்த ஏனைய நாடுகளுக்கு, சாதகமான நிலையை எட்ட நீண்ட காலம் பிடித்தது. அண்மைய வரலாற்றில், உலகில் எந்த நாடும் இவ்வளவு சிறப்பான வெற்றியை இவ்வளவு குறுகிய காலத்தில் பெற்றதில்லை.

நமது பொருளாதாரம் வீழ்ந்துள்ள படுகுழி தொடர்பில் நாம் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தோம். அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய சரியான தீர்வுகளை நாங்கள் அறிந்திருந்தோம். எங்களுடைய தொலைநோக்குப் பார்வை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு காரணமாக இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. எனவே, இந்த வழியைப் பின்பற்றினால், நான்காவது கட்டமான 2048 இற்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாற முடியும் என்பது இப்போது தெளிவாகிறது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் இருந்த ஒரு நாட்டின் தற்போதைய நிலை என்ன?

தொடர்ந்து 6 காலாண்டுகளாக சுருங்கிச் சென்ற நமது பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து வளரத் தொடங்கியது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மீண்டு வர வழியின்றி, வற்றிப் போயிருந்த எமது வெளிநாட்டு கையிருப்பு தற்போது 5,500 மில்லியன் டெ-ாலராக உயர்ந்துள்ளது.

ரூபாய் வலுப்பெற்றுள்ளது. வங்கி வட்டி விகிதம் குறைந்துள்ளது.

2022 செப்டம்பரில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 9 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதன்மை கணக்கு இருப்பை உபரியாக மாற்றக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதேபோல், கடந்த ஆண்டு நாட்டின் வெளிநாட்டுக் கணக்குக் கையிருப்பில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977 இற்குப் பின்னர் உபரியை ஏற்படுத்தியது இதுவே முதல் முறையாகும்.

சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்காக நாம் இந்த இலக்குகளை எட்டியிருக்கிறோம். எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அதனால், நாம் இப்போது மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். அதேநேரம் நாம் இதுவரை கடந்து வந்த பாதை சரியானது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அன்று சமர்ப்பித்தபோது, நாட்டைப் பற்றி சிந்தித்து இந்த வேலைத் திட்டங்களுடன் இணைந்துகொள்ளுமாறு இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அழைப்பு விடுத்தேன். சில அரசியல் கட்சிகள் அந்த அழைப்பை ஏற்று இன்று என்னுடன் இணைந்து இந்தப் பயணத்திற்கு ஆதரவளித்து வருகின்றன. ஆனால் சில அரசியல் கட்சிகள் இன்றும் விமர்சித்து வருகின்றன.

இந்த விமர்சனங்கள் பற்றியும் கூற விரும்புகிறேன்.

கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்தபோது சர்வதேச நாணய நிதியம் இல்லாமல் தீர்வு கிட்டாது என்று சொன்னவர்கள் இப்போது சர்வதேச நாணய நிதியம் தேவையில்லை என்கின்றனர். மக்கள் கஷ்டப்படும்போது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பயனில்லை என்று கூறிய தரப்பினர், அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பால் தேநீருக்கு பதிலாக வெறும் தேநீரை மட்டும் குடிக்க வேண்டியிருக்கும் என்று கூறுகின்றனர்.

சிலர் பிரசித்தமடைய அரசியல் செய்கின்றனர். இல்லையெனில், பாடசாலை அரசியலை செய்கிறார்கள். அவர்களின் அரசியல், பொருளாதார, ஆட்சி நிர்வாக அறிவு முன்பள்ளிக் கல்விக்கு மேலாக வளரவில்லை.

எவ்வாறாயினும், இந்த பிரச்சினை உக்கிரமடைந்த தருணத்திலேயே அதன் ஆழத்தை நான் உணர்ந்துகொண்டேன். தனியொரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் நான் இந்த நெருக்கடி குறித்து எடுத்துக்கூறினேன். தீர்வுகளையும் வலியுறுத்தினேன். சிலருக்கு இன்னும் அதன் பாரதூரம் புரியாமல் இருக்கிறது.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர், நாட்டைக் கட்டியெழுப்ப பல நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அவை அனைத்தும் சரியானவை என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு இரு வருடங்கள் தேவைப்பட்டன. நான் இப்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சரியானவை என்பதை புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு இன்னும் சில வருடங்கள் தேவைப்படும்.

சரியானது எது என்பது புரியும் வரையில் அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதை மட்டுமே செய்வார்கள். வெட்டிப் பேச்சு பேசுவோர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர். வீண் பேச்சு பேசுவோரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர்.

அது பற்றியும் சற்றுப் பேச விருப்புகிறேன்.

நமது நாடு ஐ.எம்.எப். ஆதரவைப் பெற்றுக்கொண்ட முதலாவது முறை இதுவல்ல. இதற்கு முன்னதாக 16 தடவை ஐ.எம்.எப். ஆதரவு பெறப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு முறையும் இலங்கை தோல்வியடைந்தது. ஏன் அவ்வாறு நடந்தது? நாம் நிபந்தனைகளை மீறினோம். நாங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நிதி ஒழுக்கத்தைப் பேணவில்லை.

ஐ.எம்.எப். வேலைத் திட்டத்தில் நாம் வெற்றி பெறுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். முன்பு ஐ.எம்.எப். இடம் உதவி கோரிய 16 தடவையும் நாம் வங்குரோத்து அடைந்த நாடாக இருக்கவில்லை. ஆனால் வங்குரோத்து நாடாக உதவி கோரி, அந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு தலைமைத்துவம் வழங்கியதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அது இத்தோடு முடிந்துவிடாது. இது எமது பயணத்தில் ஒரு மைல்கல் மட்டுமே. இங்கிருந்து நாம் புதிய ஆரம்பத்தைப் பெற வேண்டும். தற்போது எங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். இவற்றை நாம் பயன்படுத்தி பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும். முழுமையான வெற்றியைப் பெற வேண்டும். நாம் முழுமையான வெற்றியைப் பெற்றால் நம் நாடு மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அதற்காகவே நான் பாடுபடுகிறேன்.

ஐ.எம்.எப். செல்ல அவசியமில்லாத, வலுவான வினைத்திறனான வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்பவே நான் பாடுபடுகிறேன். அதற்காக நாம் உழைக்கிறோம்.

நானும், எமது அமைச்சரவையும், நமது அரசாங்கமும் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கிறோம். உழைப்பது மட்டுமன்றி அதற்கான பலன்களையும் காட்டுகிறோம்.

எங்களை விமர்சிக்கும் சில குழுக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர ஆசைப்படுவோர் இப்போதே ஜனாதிபதியையும் தெரிவு செய்துவிட்டனர். அவர்களில் சிலர், ஆட்சிக்கு வந்தப் பின்னர் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் ஆழமாக ஆலோசனை நடத்துகிறார்கள்.

தொடர்ச்சி▼

# ஆபத்தான தொங்கு...

தொடர்ச்சி▲

சிலர் இப்போதே அமைச்சுக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். அவ்வாறு கனவு காணும் தரப்பினர், அவர்களின் மனைவியருக்கு அந்த அமைச்சுப் பதவிகளை வழங்குவது குறித்தும் சிந்திக்கிறார்கள்.

இந்தக் கனவு அமைச்சர்கள் இன்றைய எனது உரையை பற்றி நாட்டு மக்களிடம் எத்தனை பொய்களை சொல்லியுள்ளார்கள். ஊடக சந்திப்புக்களை நடத்தி பொய் சொன்னார்கள். அவை அனைத்துமே பொய் என்பது நாட்டு மக்களுக்கு இப்போது தெரியவந்திருக்கும்.

நாட்டுக்கு எவ்வாறான வெற்றி கிட்டினாலும், ஏன் அவர்கள் இன்னும் இதனை வன்மமாகப் பார்க்கிறார்கள்? நாட்டிற்கு கிடைக்கும் நற்செய்தியை எதிர்மறையாக பார்ப்பது ஏன்? எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் பெற ஏன் முயற்சிக்கிறார்கள்? அதிகாரத்தைப் பெறுவதற்காக ஏன் நாட்டுக்கு துரோகம் செய்கின்றனர்? இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் செய்வது ஏன்? அதற்கு இதுதான் காரணம்.

ஜனாதிபதி பதவிக்காக கடுமையாகப் போராடுகிறார்கள். நாம் நாட்டுக்காக போராடுகிறோம். அவர்களோ தங்களுக்குக் கிடைக்கும் பதவிகள், பட்டங்கள் பற்றிக் கனவு காண்கிறார்கள். ஆனால் நாம் நாட்டின் வளர்ச்சி பற்றி கனவு காண்கிறோம்.

அவர்கள் அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்ள திட்டமிடுகிறார்கள். நாம் நாட்டை கட்டியெழுப்ப திட்டங்களை வகுக்கிறோம். அதிகாரத்தைக் கோரி இலங்கையைச் சுற்றி வருகிறார்கள். பாடசாலைகளுக்குச் சென்றும் அதிகாரத்தை கேட்கிறார்கள். உலகம் முழுவதும் பறந்து நாட்டின் அதிகாரத்தைக் கேட்கிறார்கள். அதிகாரத்துக்காக அல்லும் பகலும் ஓடித் திரிகின்றனர்.

ஆனால் நாம் நாட்டுக்காக இரவு பகல் பாராமல் உழைக்கிறோம். நாடு முழுதுமாகச் சென்று மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்களை ஆரம்பிக்கிறோம். நான் உலகம் முழுவதும் சென்று நமது நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச ஆதரவைப் பெற்று வருகிறேன்.

இத்தகைய பின்னணியில் நான் உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப் புரிந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் சரியான பாதையில் சென்று உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை மேம்படுத்துவீர்களா? அல்லது பயணத்தை மாற்ற வேண்டுமா?

தவறான பாதைக்குத் திரும்பினால் அல்லது தவறான பாதையில் பயணித்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே சரியான முடிவை எடுங்கள். அந்த முடிவை எடுக்க உங்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. உங்கள் முடிவு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது. நாட்டின் எதிர்காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க எனது கட்சிக்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை. நான் நியமித்த அரசாங்க அதிகாரிகளும் இருக்கவில்லை. அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால் அவை எதுவுமேயில்லாமல், உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் இரண்டு வருட காலத்தில் நாட்டை சுமூகமான நிலைமைக்கு கட்டியெழுப்ப என்னால் முடிந்தது. அதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு வீதிகளில் எவற்றை கண்டோம்? இன்று எதனைக் காண்கின்றோம்.

ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கை அன்னையை மீட்டுத் தருவதாக அன்று நான் வாக்குறுதி அளித்தேன். குழந்தையைப் பத்திரமாக மீட்டு வந்திருக்கிறேன். இப்போது என்ன நடந்தது? "ஹுனுவடயே" நாடகத்தில் வருவது போல், குழந்தையைக் காக்க எந்த ஆதரவும் தராத குழுக்கள் தற்போது குழந்தையின் உரிமையைப் பெறப் போராடுகின்றனர்.தொங்கு பாலத்தைக் கடக்கும் முன் குழந்தையை சொந்தமாக்க முயற்சிக்கிறார்கள். குழந்தையை இரு பக்கமாக அன்றி அனைத்துப் பக்கங்களிலும் பிடித்து இழுக்கின்றனர்.

நாம் அறிந்த 'ஹுனுவடயே' நாடகத்தின் நிறைவில், குழந்தையின் உரிமை உண்மையான தாய்ப்பாசமுள்ள அன்னைக்கு கிடைக்கிறது.

"தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்க வேண்டும். குதிரை சரியான வண்டியோட்டியிடம் கொடுக்கப்பட வேண்டும்" என்று நாடகத்தின் கதாசிரியர் கூறுகின்றார்.

அந்தக் கதையில் வரும் நீதிபதி அஸடக்கைப் போன்று நீங்களும் சரியான முடிவை எடுக்க வேண்டும். அப்போது தகுயானவருக்கு தகுதியானது கிடைக்கும். நமது நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிட்டட்டும்." – என்றார்.

# வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் யாழில் கஜேந்திரன் எம்.பி. பேச்சு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பொதுநலவாய அமைப்பின் தென் ஆசிய பகுதிக்குப் பொறுப்பதிகாரி மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆகியோருக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியிலிருந்து 9 மணி வரை யாழ். நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இரண்டு மணித்தியாலங்களாக நடைபெற்ற மேற்படி சந்திப்பில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம், சமஷ்டி அதிகாரப் பகிர்வு, ஐ.நா. தீர்மானங்கள், பொறுப்புக் கூறல், தமிழர் தாயகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள சிங்கள மயமாக்கல் – பௌத்த மயமாக்கல், கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சியின் நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன என்று கஜேந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வகிக்கும் பதவிக்குத் தாங்கள் வரப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரணிலோ கிடைத்த பதவியில் இறுதிக்காலம் வரை நீடிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவ்வளவு மட்டும்தான் வித்தியாசம். இதில் ரணில் மற்றவர்களைப் பார்த்துக் குறை கூற ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

+ + +

ஜனாதிபதியின் பதவி காலத்தை நீடிக்கும் முயற்சிக்கு இனிப் போதுமான கால அவகாசம் இல்லை என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அதனால் இன்னும் நூறு நாள்களில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பது உறுதியாகி வருகின்றது.

தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் மூவருமே தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றதும் அடுத்த 24 மணி நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவோம் என்று கூறி வருகின்றனர். அதனால் இன்னும் 100 நாள்களில் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதும் பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் இப்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் எம்.பிக்கள் பலரும் தங்களின் அரசியல் எதிர்காலம் குறித்துத் திட்டமிட்டு வியூகம் அமைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார்கள் என்று கணிப்பிட்டு அவர்களின் பின்னால் சேருவதிலும் பார்க்க -

யார் வென்றாலும், அதன் பின்னர் விரைந்து வரப் போகின்ற பொதுத்தேர்தலில் எந்தத் தரப்புடன் அணி சேர்ந்தால் தத்தமது மாவட்டத்தில் தாங்கள் வெற்றியை வரும் தேர்தலில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்பதைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் அணி சேரவே அவர்கள் ஒவ்வொருவரும் முயற்சிக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார்கள் என்பதை விட, அதன் பின்னர் வரும் பொதுத் தேர்தலில் எந்த அணியில் நின்றால் தங்கள் மாவட்டத்தில் தாங்கள் தேர்வாக முடியும் என்பதுதான் அவர்களுக்குப் பிரச்சினை.

அவனவனுக்கு அவனவன் பிரச்சினை...!

## இரு தரப்பு கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

குழுவுடன் இறுதி இணக்கப்பாட்டை எட்டியுள்ளது.

மேலும், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் பீஜிங்கில் இலங்கை நேற்று இறுதி இணக்கப்பாட்டை எட்டியதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடப்பட்டது.

இந்த இணக்கப்பாடுகளுடன், இலங்கை தனது முக்கிய உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் இணைந்து தலைமை தாங்கின. ஆஸ்திரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜெர்மனி, ஹொங்கேரியா, கொரியா, நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்பெயின், சுவீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருந்தன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் சீனா எக்ஸிம் வங்கி மூலம் மறுசீரமைக்கப்பட வேண்டிய கடனின் ஒருங்கிணைந்த மதிப்பு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து இலங்கை அந்நிய செலாவணிக் கையிருப்பை இழந்தது. இதனால் கடன் செலுத்த முடியாத நாடாக அறிவித்தது.

இலங்கையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டது. கடன் நிலைபேற்றுத் தன்மையற்ற நாடுகளுக்கு கடன் வழங்க சர்வதேச நாணய நிதியத்துக்கு முடியாது என்பதால் இலங்கை தனது அரச கடன் மறுசீரமைக்கும் செயற்பாட்டை ஆரம்பித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு ஆரம்பத்தில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் மூலம் கடன் நிவாரண அளவு தீர்மானிக்கப்படுகின்றது.

அதன் பின்னர், இந்த கடன் வழங்குநர்கள் மற்றும் கடனில் உள்ள நாடும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு மூலம் காட்டப்படும் இலக்கை அடையத் தேவையான பணிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்காக கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை இலங்கை தொடர்ந்து முன்னெடுத்தது.

சர்வதேச நாணய நிதிய கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளின் அடிப்படையில் வழங்கப்படும் கடன் நிவாரணம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடும்.

கடன் வழங்கும் நாடுகள் வெவ்வேறு வழிகளில் கடன் நிவாரணம் வழங்குகின்றன. உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கி போன்ற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் இவற்றை வெவ்வேறாக தீர்மானிக்கின்றன.

காலத்தை நீடித்தல், விதிமுறைகளை தளர்த்துதல் மற்றும் வட்டி விகிதங்களைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கடன் நிவாரணம் வழங்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடனான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் இரண்டும் குறிப்பிடத்தக்க கணிசமான கடன் நிவாரணத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பொருளாதாரம் மீளவும் வழமைக்கு திரும்பும் வரையில் எதிர்காலத்தில் கடன் சேவைத் திறன் மேம்படும் வரை குறுகிய காலத்தில் இலங்கைக்கான தற்போதைய கட்டணச் சுமையை இது குறைக்கும்.

இதை மதிப்பிடுவதற்காக உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் ஊடாக ஐஎம்எப் உடனான நிகழ்ச்சி நிரல் அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில், செலுத்த வேண்டிய குறித்த கடனில் நிவாரணம் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு கடன் வழங்குநருடனும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் போது ஐ.எம்.எப். கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய வேண்டும். அத்துடன், ஏனைய கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களுடன் ஒப்பிடப்படும் வகையில் இது இருக்க வேண்டும்.

அடுத்த கட்டமாக, வர்த்தக பிணை முறி உரிமையாளர்களுடனான இறுதிக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை எட்டுவதை இலங்கை துரிதப்படுத்தும். முறையான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடிப்பது இந்த செயல்முறையை எளிதாக்கும்.

நேற்று எட்டப்பட்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் பின்வரும் நன்மைகளை உள்ளடக்கியது.

**1. நிதி நிவாரணம்:**

இலங்கையின் வரி வருவாயை கடனை செலுத்துவதற்கு பதிலாக அத்தியாவசிய பொதுச்சேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். இது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கால அவகாசத்தை வழங்குகின்றது.

**2. வெளிநாட்டு நிதி:**

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு இருதரப்பு நிதியுதவி வசதிகளைப் பெறுவதை மீண்டும் தொடங்கலாம். வரவு - செலவுத் திட்டத்தின் மூலதன செலவினங்களை ஆதரிக்க குறுகிய கால வெளிநாட்டு நிதி கிடைப்பதில் இது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இது நிர்மாணத்துறை போன்ற துறைகளில் சாதகமான விளைவுகளையும், முக்கியமான உள்கட்டமைப்பு மேம்பாட்டில் நடுத்தர முதல் நீண்ட கால சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும்.

**3.கடன் தரப்படுத்தல்:**

இலங்கையின் கடன் தரப்படுத்தலை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு ஒரு முக்கியமான முன்னெடுப்பாக உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பின் முடிவு அமையும். வர்த்தக பிணை முறி உரிமையாளர்களின் கடன்களும் விரைவாக மறுசீரமைக்கப்பட்ட பின்னர், அது கடன் தரப்படுத்தலின் உயர்வுக்கு வழிவகுக்கின்றது.

உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பின் முடிவானது வெளிநாட்டு நிதியுதவிக்கான எளிதான பிரவேசம் என்பதுடன் குறைந்த செலவு போன்ற வழிகளின் ஊடாக குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும். இது வர்த்தக நிதியிலிருந்து வங்கிகளுக்கு இடையேயான நிதியுதவி வரை அனைத்து துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## சட்டமா அதிபரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீடிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரை நேற்று நடந்த அரசமைப்பு சபைக் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிராக 5 வாக்குகளும், ஆதரவாக 3 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் குறித்த பரிந்துரை மீண்டும் நிராகரிக்கப்பட்டது.

இதேவேளை, அரசமைப்பு சபையின் முடிவைப் புறந்தள்ளி சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவைக் காலத்தை நீடித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அனுமதியை வழங்கியுள்ளார் என்று நேற்று செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அடுத்த இரு பெரும்போகங்களுக்கான நெல் பயிர்ச்செய்கைக்கு உரம் இலவசம்

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு



**“ஜூலை 01ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரை இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராம வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய வாரமொன்று அறிவிக்கப் படவுள்ளது. நெற் பயிச்செய்கைக்குத் தேவையான ஆமூ உரத்தை அடுத்த இரண்டு பெரும் போகங்களுக்கு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.”**

**- இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, இளைஞர் சமூகத்தை விவசாயத்துறைக்கு ஈர்க்கும் வகையில் பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. அது தொடர்பில் நாட்டின் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய 160 கிராமங்களை தெரிவு செய்து இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமத் திட்டங்களை ஆரம்பிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, ஜூலை முதலாம் திகதி முதல் ஜூலை 07ஆம் திகதி வரை இளைஞர் விவசாய தொழில்முனைவோர் கிராமத் திட்டத்தை செயல்படுத்தும் தேசிய வாரமாக அறிவிக்கிறோம். முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க 10 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1600 மில்லியன் ரூபாவாகும்.

அத்துடன், 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாட்டின் காரணமாக, அந்த ஆண்டில் 08 லட்சம் மெற்றிக் தொன் அரிசியை அரசாங்கம் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இதற்காக அரசாங்கம் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது. ஆனால் 2023 ஆம் ஆண்டு நாட்டிற்கு தேவையான மொத்த அரிசியையும் உற்பத்தி செய்ய முடிந்தது.

2024 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி செய்ய, அவசியமான தேசிய நெல் தேவை 4.1 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். 2023 இல் மொத்த நெல் உற்பத்தி 4.5 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். அடுத்த 05 போகங்களில் இந்நாட்டில் நெற்பயிர்ச் செய்கையை இரட்டிப்பாக்குவதே எமது இலக்காகும். இந்த இலக்கை அடைய, நெல் விளைச்சலுக்கான தொழில்நுட்ப பெகேஜ் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

நெற் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வகையில், பல்வேறு பிரதேசங்களில் ஒரு லட்சம் ஹெக்டெயார்களை தேர்ந்தெடுத்து நெல் விளைச்சலை அதிகரிக்க சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தவுள்ளோம். கடந்த சில ஆண்டுகளாக காலநிலைப் பாதிப்பு காரணமாக பயிர் சேதமும் அதிகரித்துள்ளது.

மேலும், இந்நாட்டிற்குத் தேவையான மொத்த முட்டை மற்றும் பால் உற்பத்தியில் இன்னும் நம்மால் தன்னிறைவு அடைய முடியவில்லை. 2021 உரப் பிரச்சினையால் கால்நடைத் தீவனமாக சோளம் உற்பத்தி குறைந்ததால் கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு பாதிக்கப்பட்டது. நமது தேசிய சோளத் தேவை 06 இலட்சம் மெட்ரிக் டொன்கள் ஆகும். 2023 பெரும் போகத்தில் சோள விளைச்சல் 221,249 மெட்ரிக் தொன்களாக அதிகரித்துள்ளது.

முட்டை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அதன்படி, அடுத்த இரண்டு மாதங்களில் 160 இளைஞர் விவசாயத் தொழில்முனைவோர் கிராமங்களில் உள்ள தொழில்முனைவோருக்கு 160,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும்.

அதேபோன்று, சந்தையில் தேங்காய் எண்ணெய்யின் விலை அதிகரிப்பு தொடர்பிலும் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது இறக்குமதி செய்யப்படும் 01 லீற்றர் தேங்காய் எண்ணெய்க்கு 150 ரூபாவை அரசாங்கம் அறவிடுகின்றது. விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் என்ற வகையில் எதிர்காலத்தில் இந்த தொகையை குறைக்கும் பரிந்துரையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளேன்.

நாட்டின் வருடாந்த தேங்காய் எண்ணெய்த் தேவை 25,868 மெற்றிக் தொன் எனவும், தற்போது நாட்டில் 51,457 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இருப்பதாகவும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் சந்தையில் உரங்களின் விலை உயர்வால் நெல் உள்ளிட்ட ஏனைய பயிர் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்திடம் இருந்து ஆமூ உரத்தைப் பெற கோரிக்கை விடுத்துள்ளோம். அதன்படி, 55,000 மெற்றிக் தொன் ஆமூ உரத்தை வழங்குவதற்கு அந்த அமைப்பு இணங்கியுள்ளது. அடுத்த இரண்டு போகங்களில் நெல் விவசாயிகளுக்கு இலவசமாக ஆமூ உரம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மேலும், தேயிலை பயிர்ச்செய்கைக்கான உரங்களை மானிய அடிப்படையில் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அதன்படி, அரசாங்கத்துக்குச் சொந்தமான உர நிறுவனங்கள் தேயிலை பயிர்ச்செய்கைக்கு அவசியமான உரத்தை உற்பத்தி செய்வதுடன், சந்தை விலையை விட 50 வீதம் குறைவாக அந்த உரங்களை வழங்குகின்றன. இந்த உர மானியத்திற்காக செலவிடப்படும் தொகை 12 பில்லியன் ரூபாவாகும்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் சாதனை அல்ல இது!

எதிர்பார்த்தபடி நேற்றிரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டு மக்களுக்கான உரை முடிந்து விட்டது. வெளிநாட்டுக் கடன் மீளளிப்புத் தொடர்பான மறுசீரமைப்பு ஒழுங்குகள் பற்றிய பல்வேறு விடயங்கள் பொதிந்த அறிவிப்புதான் அது.

கடன் கொடுப்பனவுகள் தொடர்பில் கடன் வழங்கிய தரப்புகளிடம் சற்று கால அவகாசம் பெற்றிருப்பதை தவிர இதில் அவரதும், அவரது அரசினதும் சாதனை என்று ஏதும் அப்படி மெச்சும்படியாக இருப்பதாகத் தெரியவில்லை.

கடன் கொடுத்த தரப்புகள் இலங்கை கடனை மீளளிக்க வக்கற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து, மீளளிப்புக்குக் கருணைக்காலம் கொடுத்திருக்கின்றார்கள். நாடு பொருளாதார நிலையில் தன்னை ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்தி, மூச்சு விடத் தொடங்கிய பின்னர், டனை மீளளிப்பதற்கு அவை இலங்கைக்கு கருணை காட்டி இருக்கின்றன.

ஏற்கனவே இப்பதியில் ஆறு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கக் கடன் கொடுத்த நாடுகள் இணங்கியுள்ளன என்று கோடி காட்டி இருந்தோம். அதுவே நடந்துள்ளது.

2022 ஏப்ரலில் இலங்கை கடன் மீளளிப்புச் செய்வதை - கடன் கொடுப்பனவுத் தவணைக்குரிய பணத்தைச் செலுத்துவதை - நிறுத்தி இருந்தது.

அதிலிருந்து ஆறு வருடங்களுக்கு - அதாவது 2028 வரை - கடன் மீளளிப்பைத் திரும்ப தொடங்குவதற்கான கால அவகாசமாக உதவும் நாடுகள் ஒன்றுபட்டு இணங்கி வழங்கி இருக்கின்றன.

இன்றைய நிலையில் எந்த அரசு இருந்திருந்தாலும் அதனைச் செய்திருக்கும் செய்திருக்க வேண்டும். அதனையே ரணிலின் அரசும் செய்திருக்கின்றது. இதில் அந்த அரசின் சாதனை என்று ஏதேனும் மெச்ச இல்லை.

அப்படி ஏதும் இருக்கும் என்றால், இவ்வளவு பின்னடைவுக்கு பின்னரும் இலங்கையை நம்பி மேலும் 4 ஆண்டுகள் விட்டுக்கொடுப்புக் காலத்தை - கால அவகாசத்தை - வழங்கிய சர்வதேச சமூகத்தைத்தான் பாராட்ட வேண்டும். அதன் இந்த இணக்க சாதனையைத்தான் மெச்ச வேண்டும்.

கடன் மீளளிப்புக்கு சர்வதேச சமூகத்திடம் - கடன் வழங்கிய தரப்புகளிடம் - கால அவகாசம் பெற்று வந்தமை அப்படி ஒன்றும் பெரும் சாதனை அல்ல மெச்சிப் புகழ்வதற்கு.

அதற்கு அப்பால், விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதில் ரணிலின் அரசு என்ன வெட்டி பிடுங்கி விட்டது என்பதுதான் கேள்வி.

நாட்டை இந்தச் சீரழிவு நிலைக்குக் கொண்டு வந்ததே ஊழல், மோசடி, லஞ்சம், பொறுப்பற்ற நிதிக் கையாள்கை, பொறுப்பு கூறலின்மை போன்ற பின்னடைவுகள்தான்.

அவற்றை இல்லாமல் செய்வதற்கான எந்தக் காத்திரமான நடவடிக்கையையும் ரணிலின் அரசோ தலைமையோ எடுக்கவில்லை. மாறாக அந்தக் குளறுபடிகளில் ஊற்றுக் கண்களின்தயவில்தான்அவரது அரசு தங்கி நிற்கின்றது. அவர்களே ரணிலின் அரசைச் சூழ நிற்கின்றார்கள். அரசைக் கொண்டு நடத்துகின்றார்கள்.

இத்தகைய பின்புலத்தில், உதவும் நாடுகளின் - சர்வதேசசமூகத்தின் - எத்தகைய உதவிகள் கிடைத்தாலும், ஒத்துழைப்புக் கிட்டினாலும், சலுகைகள் வந்தாலும், நாட்டுக்குப் பொருளாதாரமீட்சிசாத்தியப்படவேபோவதில்லை என்பது தெளிவு.

பொருளாதார நெருக்கடியில் குப்புற விழுந்த இலங்கை, அதிலின்றும் மீண்டெழுவதற்காக சர்வதேச சமூகம் - உதவும் நாடுகள் - நீண்ட கால அவகாசம் வழங்கி உதவ முன் வந்திருப்பது பாராட்டுக்குரியதுதான். ஆனால் அது ரணில் அரசின் கெட்டித்தனமோ, சாதனையோ ஆகிவிடாது என்பதுதான் உண்மை.

## எல்லை தாண்டிச் செல்ல வேண்டாம்:

# இராமேஸ்வரம் மீனவர்களிடம் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை





இராமேஸ்வரத்திலிருந்து கடற்றொழிலுக்கு செல்லும் கடற்றொழிலாளர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டி செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்றொழிலுக்கு செல்லும் போது உயிர் காக்கும் உபகரணங்களை கையில் வைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மீன்வளத்துறை உதவி இயக்குனர் அப்துல் காதர் ஜெய்லானி உத்தரவின் பேரில் இராமேஸ்வரம் மீன்வளத் துறை அதிகாரிகள் ஒலிபெருக்கி மூலமாக அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வாரத்தில் 30 இற்கும் மேற்பட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் அடுத்தடுத்து இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை கடற்றொழிலுக்கு சென்ற மூன்று விசைப்படகுகளையும் அதிலிருந்து 22 கடற்றொழிலாளர்களையும் எல்லை தாண்டி பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்துள்ளனர்.

அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் நாகை கடற்றொழிலாளர்களை இலங்கை கடற்படை கைது செய்து யாழ்ப்பாணம் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக கடற்றொழிலாளர்களை தொடர்ந்து இலங்கை கடற்படை கைது செய்து வருவதால் கடற்றொழிலாளர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதன் எதிரொலியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவில் தரமற்ற மருந்துகள் விற்பனை: மருந்து கட்டுப்பாட்டு வாரியம் எச்சரிக்கை

இந்தியாவில் தயாரிக்கப்படும் 52 மருந்து வகைகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த தரமற்ற மருந்து வகைகளில் 50 மருந்துகள், காய்ச்சல் மருந்து,வயிற்றுப் பிரச்சினைக்கான மருந்து மற்றும் ஆன்டிபயோடிக் மருந்துகள் போன்றவையும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை, விட்டமின், கல்சியம், சத்து மாத்திரைகள், ஹைப்பர் டென்ஷனுக்கான மருந்துகள், ஆஸ்துமா போன்ற சுவாச பிரச்சினைகளுக்கான மருந்துகள் போன்றவையும் உள்ளன.

இந்த 52 தரமற்ற மருந்துகளில் 22 மருந்துகள் இமாச்சலப் பிரதேசத்தில் தயாரிக்கப்படுகின்றன என கூறப்படுகின்றன.

மேலும், ஜெய்ப்பூர், குஜராத், இந்தோர், ஆந்திரப்பிரதேசம், ஐதராபாத் உள்ளிட்ட பிரதேசங்களில் மீதமுள்ள மருந்துகள் தயாரிக்கப்பட்டு மருத்துவமனைகள், மருந்தகங்களில் விநியோகம் செய்யப்படுகின்றன.

இந்தநிலையில், மேற்படி மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு மருந்து கட்டுப்பாட்டு வாரியம் எச்சரிக்கை கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

ஏற்கனவே சந்தையிலுள்ள தரமற்ற 52 மருந்துகளை திரும்பப் பெறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் இமாச்சலப் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட 120 மருந்துகள் தரமற்றவை என்று கண்டறியப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கென்ய ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட மோதலில் சிக்கி 23 பேர் உயிரிழப்பு; பெருந்திரளானோர் படுகாயம்

கென்யாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட மோதலில் சிக்கி இதுவரையில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். பெருந்திரளானோர் காயமடைந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த நாட்டு நாடாளுமன்றத்திற்கு தீ வைத்து செங்கோலையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

புதிய வரி விதிப்பு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் சர்ச்சைக்குரிய நிதி சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புதிய நிதி சட்டமூலத்திற்கு அமைய பல அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொருள்களுக்கு பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டமையே கென்ய ஆர்ப்பாட்டத்திற்கான காரணமாகும்.

சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொண்டதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரகசிய பதுங்கு குழி வழியாக அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கென்யாவின் நைரோபி நகரில் பல நாள்களாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சகோதரி அனுமா ஒபாமாவும் ஆர்ப்பாட்டக்காரர்களில் அடங்குகின்றார்.

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்பினரே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என கென்ய ஜனாதிபதி வில்லியம் ருட்டோ நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கென்ய ஜனாதிபதி கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த வாரம் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்தினால் நிதி சட்டமூலத்தை அந்த நாட்டு அரசாங்கம் இரத்து செய்துள்ளது.





















# வொஷிங்டனில் கடும் வெப்பத்தால் ஆபிரகாம் லிங்கன் சிலை உருகியது

அமெரிக்காவில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதனால், அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கனின் மெழுகுச் சிலை உருகியுள்ளது.

6 அடி உயரத்தில் உருவாக்கப்பட்டுள்ள அந்தச் மெழுகுச் சிலையின் தலைப்பகுதி வெப்பத்தால் உருகி கீழே வளைந்துள்ளது.

திறந்தவெளியில் வைக்கப்பட்டிருந்த ஆபிரகாம் லிங்கன் சிலையின் சேதமடைந்த தலைப் பகுதியை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆபிரகாம் லிங்கன் அடிமை முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.


1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாக வெற்றி பெற்றார். அவரை பெருமைப்படுத்தும் வகையில், வொஷிங்டனில் உள்ள

கரிசன் ஆரம்ப பாடசாலை வளாகத்தில் 6 அடி உயரத்தில் அமர்ந்த நிலையில் ஆபிரகாம் லிங்கனின் மெழுகுச் சிலை வடிவமைப்பட்டிருந்தது.

அவரது நினைவிடத்தில் வைக்கப்பட்டுள்ள சிலையை போலவே இந்த சிலையும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வொஷிங்டனில் சுமார் 100 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் நிலவியதாக வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.


# வாடாத மல்லிகை டொமினிக் ஜீவா



**ஈழத்து இதழியல் வரலாற்றில்சாதனை படைத்த 'டொமினிக் ஜீவா'வின் 97 ஆவது அகவை நாள் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**-ஐங்கரன் விக்கினேஸ்வரா-**

பல தசாப்தங்களாக வெளிவந்த மல்லிகையின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் கொள்கைப் பிடிப்பு, அவர் உழைப்பு, பொறுமை, விவேகம், பெருந்தன்மை, தோழமை




உணர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவையே முக்கியமாகும். தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் இலக்கியப் பாலமாக விளங்கிய டொமினிக் ஜீவா, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடியுமாவார்.

மல்லிகை 1966 ஒகஸ்ட் மாதத்தில் இதன் முதல் இதழ் வெளியானது. இதன் ஆசிரியராக டொமினிக் ஜீவா மல்லிகையை ஒரு முற்போக்கு மாத இதழாக வெளியிட்டார். நாற்பதுக்கும் அதிக ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மல்லிகை சஞ்சிகைக்கும், டொமினிக் ஜீவாவுக்கும் முக்கிய பங்குண்டு. அத்துடன் மல்லிகையின் 400 க்கும் அதிகமான இதழ்கள் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், பதிப்பாளருமான டொமினிக் ஜீவா இன, மத பேதமின்றி மாற்றுக் கருத்தாளர்களுடனும் நட்பாக தோழமையில் இருந்தவர். மல்லிகை முதல் இதழ் பிறக்கும்போதே தன்னை ஒரு முற்போக்கு மாத சஞ்சிகை என்று துணிச்சலாகப் பிரகடனம் செய்து கொண்டது.

மல்லிகை– டொமினிக் ஜீவா "ஆடுதல், பாடுதல், சித்திரம், கவியாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும்" நடப்பவர். அத்துடன் மல்லிகை பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர் என்ற மகாகவி பாரதியின் வாக்கையும் தனது குறிக்கோள் வாசகமாகப் பொறித்துக் கொண்டார்.

### சாகித்திய மண்டலப் பரிசு:

டொமினிக் ஜீவா எழுதிய தண்ணீரும் கண்ணீரும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. இவரது "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்"ஈழத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுயவரலாற்று நூலாகும். டொமினிக் ஜீவா எழுதிய சிறுகதைத் தொகுப்புகளான தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகிய நூல்கள் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மல்லிகையின் இதழின் முகப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம், தமிழகத்துக் கலை இலக்கியகர்த்தாக்களின் உருவப் படங்களைப் பிரசுரித்து வெகு சனங்களின் மத்தியில் அவர்களைக் கொண்டு சென்ற, டொமினிக் ஜீவா ஈழத்து இலக்கிய வரலாற்றில் பாரிய பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.


டொமினிக் ஜீவாவின் கட்டுரைத் தொகுப்புகளான அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத் தாளினூடாக ஓர் அனுபவ பயணம், நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாள்கள் ஆகிய நூல்களும் பிரபல்யமானவையாகும்.

அத்துடன் மல்லிகையில் வெளிவந்த இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிங்களச் சிறுகதைகளை ஒன்று சேர்த்து "சிங்களச் சிறுகதைகள்"– என்ற பெயரில் நூலாகவும் வெளியிட்டார்.

### கொள்கைப் பிடிப்பும் மொழிப்பற்றும்:

மல்லிகையின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களாக மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் கொள்கைப் பிடிப்பு, அவர் உழைப்பு, பொறுமை, விவேகம், பெருந்தன்மை, தோழமை உணர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவையே முக்கியமாகும்.

மல்லிகையில் எழுதிய எழுத்தாளர்கள், இன்னுமொரு விடயத்துக்காகவும் மல்லிகையின் பங்களிப்பு முக்கியமானது. அது இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றினை வெளிப்படுத்தும் ஆவணங்





களாக இருந்தன மல்லிகை இதழ்கள். இதனாலேயே ஜீவா பற்றிய ஆய்வு நூல்களை வேறு பல அறிஞர்களும் எழுதியுள்ளனர்.

"டொமினிக் ஜீவா – கருத்துக் கோவை" எனும் தொகுப்பை மேமன்கவி எழுதியுள்ளார். "மல்லிகை ஜீவா நினைவுகள்" எனும் நூலை லெ.முருகபூபதி, 2001

தொடர்ச்சி▼



# வாடாத மல்லிகை டொமினிக் ஜீவா




தொடர்ச்சி▲

இல் வெளியிட்டார். பின்னர் "பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும்" என்ற தொகுப்பு மேமன் கவியால் எழுதப்பட்டதையும் பலர் அறிவர். 2004 "மல்லிகை ஜீவா – மனப்பதிவுகள்" என்ற நூலை திக்குவல்லை கமால் ஆய்வு செய்து வெளியிட்டார்.

**ஜீவாவின் இலக்கிய சதனைகள்:**

இத்தகைய இலக்கிய சாதனைகளை படைத்த மல்லிகை ஜீவாவுக்கு 2013இல் "இயல் விருது" கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், றொறொன்ரோ பல்கலைக்கழக




தென்னாசியக் கழகமும் இணைந்து வழங்கியது. 2007இல் "சங்கச் சான்றோர் விருது" இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் வழங்கியது.

1966 இலிருந்து மல்லிகை மாத இதழை ஆரம்பித்து நாற்பதுக்கும் அதிக ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வந்ததன் வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் குரலாக அது ஒலித்ததுதான்.

இச்சங்கத்தின் கொள்கைகளைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பும் செயல் வீரனாக விளங்கினார் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா.

மல்லிகை அவரது 'சொந்தப் பத்திரிகை' என்றபோதிலும் – அதனால் ஏற்படும் பொருளாதார லாப நஷ்டங்களுக்கு அவரே பொறுப்பு என்ற போதிலும் – மல்லிகையை மக்கள் உடைமை என்றே ஜீவா கருதினார். இதற்குக் காரணம், மார்க்ஸியம், லெனினியத்திலும் அதன் செயல்பாட்டிலும் அவர் கொண்டுள்ள அதிக பற்றும் உறுதியும் ஆகும்.

மக்கள் சஞ்சிகையான மல்லிகையின் சாதனைகளாக யாழ்ப்பாணத்தில் மூத்திர ஒழுங்கை என்ற இடத்தில் இருந்து கொண்டே "மல்லிகைப் பந்தல்" பிரசுரத் தளத்தையும் உருவாக்கி – இன்று அறுபதுக்கும் கூடுதலான தரமான நூல்களை வெளியிட்டுள்ளமை மல்லிகை ஜீவாவின் மற்றொரு சிறப்புகளில் தனித்துவமானது.

**சரித்திரமாகிய மல்லிகை சஞ்சிகை:**

டொமினிக் ஜீவா 2021 ஜனவரி 28 மாலை தனது 93 ஆவது அகவையில் கொழும்பில் கொவிட் பெருந்துயர காலத்தில் காலமானார். டொமினிக் ஜீவா இறந்த பின்னர் இவருக்கு எமக்கு வெகு தெளிவாகவும் துல்லியமாகவும் ஒன்று தெரியும். சரித்திரத்தில் பேசப்படப் போகும் சஞ்சிகை மல்லிகை என்று. காலம் பல கடந்த பின்னரும் நின்று நிலைத்துப் பேசப்படப்போகும் இதழ் மல்லிகை.

அவரது படைப்புகள் இலங்கைத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்தன. அவரது இலக்கியப் பங்களிப்புகளில் நாம் பிரதானமாகக் கருவதுவது அவரது இதழாசிரியப் பங்களிப்பையே.

மல்லிகையை ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் வாங்கக்கூடிய ஒரு காலம் வரத்தான் போகின்றது என இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

# இந்திய மீன்பிடிப் படகு மோதி கடற்படை வீரர் உயிரிழப்பு; கொலையாகக் கருதி விசாரணை



இந்திய மீன்பிடிப் படகு மோதி கடற்படை உறுப்பினர் உயிரிழந்தமையைக் கொலையாகக் கருதி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடிப் படகில் இருந்தவர்களைக் கைது செய்ய முற்பட்ட போது கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

கடற்படை படகில் இருந்து இந்திய மீனவர்களின் படகிற்குச் செல்ல முயற்சித்தபோது, இந்திய மீன்பிடிப் படகு ஆபத்தை விளைவிக்கும் வகையில் செலுத்தப்பட்டதால் ஏற்பட்ட விபத்திலேயே அந்த கடற்படை உறுப்பினர் உயிரிழந்தார் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையின் விசேட படகுகள் அணியின் உறுப்பினராக கடமையாற்றி வந்த 41 வயதான பிரியந்த ரத்நாயக்க எனபவரே இந்த சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளார்.



# யாழ். வந்த பிரி. தூதருடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

அவர்களை, இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ரூ பற்றிக் உள்ளிட்ட குழுவினர் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, தொழில் வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 1,500 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளன எனவும், அவர்களை மீள் குடியேற்றுவதற்கான உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், 'உரித்து' செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.



வெளிநாடுகளில் உள்ள வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் நாட்டிற்கு வருகை தந்து தங்களின் காணி உறுதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

வடக்கு மாகாணத்திற்கான போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும், உள்நாட்டு விமான போக்குவரத்தை முன்னெடுப்பது தொடர்பில் மத்திய அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளதாகவும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.




# அரச அதிகாரிகள், அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு பணிப்புரை

ஜனாதிபதி தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் பங்குபற்றக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கை தொடர்பில் உரிய ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அரச நிறுவனங்களின் வாகனங்கள் குறித்த தகவல்களும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதற்கான விசேட படிவமும் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.



### மூதூரில் மதுபானக்கடைக்கு எதிர்ப்பு

# போராட்டக்காரர்கள் 15 பேருக்கு ஜூலை 7 வரையில் விளக்கமறியல்

## மேலும் 13 சந்தேகநபர்களைக் கைது செய்யவும் அனுமதி

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர்,இருதயபுரம் மதுபானக்கடை எதிர்ப்பு போராட்டக்காரர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டு, நேற்று மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தபட்ட போது, அவர்களை எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி, பொலிஸார் முன்வைத்த விண்ணப்பத்தை ஏற்று, சம்பவத்தில் தொடர்புடைய ஏனைய 13 சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான அனுமதியையும் வழங்கினர்.

வழக்கு ஜூலை 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.



## மூதூரில் வீடு வீடாகக் கைது!

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர், இருதயபுரத்தில்( பச்சைனூர்) மதுபான விற்பனை கடை அமைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் மீது நேற்று முன்தினம் மதியம் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் பெண்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர். பாடசாலை மாணவர் ஒருவர், கைக்குழந்தை ஒன்று உட்பட 15பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போராட்டம் நடைபெற்றபோது அவ்விடத்திலிருந்த சில விசமிகள் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது கல் வீச்சில் ஈடுபட்டனர். இதனால் இரண்டு பொலிஸார் காயமடைந்து மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதனை அடுத்து நேற்று முன்தினம் மதியத்திலிருந்து பொலிஸார் வீடு வீடாக சென்று பெண்கள் உட்பட போராட்டத்தோடு தொடர்பில்லாத பலரையும் கூடக் கைது செய்துள்ளனர்.

## அரச அதிபர் மூதூர் மக்களுக்கு தந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது

### இம்ரான் மஃரூப் எம்.பி. விசனம்



(எஸ்.கீதபொன்கலன்)

ஆலயம், பாடசாலை என்பவற்றிற்கு மிக குறுகிய தூரத்தில், மதுபானக்கடையை அமைப்பதற்கு அனுமதி வழங்கியமை மிகப்பெரிய தவறு. அத்துடன் சென்ற18 ஆம் திகதி கடை திறப்பிற்கு ஊர்மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது கடையை தற்காலிகமாக மூடுவதாகவும், நிரந்தரமாக கடையை மூட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் பொதுமக்களுக்கு கொடுத்த வாக்குறுதியும் தற்போது மீறப்பட்டுள்ளது. இது மிக மோசமான செயல்.

– இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் கூறினார்.

செவ்வாயன்று அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மிலேச்சத்தனமாக பொலிஸாரால் அடித்து. காயப்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டமை மிக மிக கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறினார்.

மூதூர் இருதயபுரம் மதுபானகடை திறப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடியபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் குருவானவர்களை இருதயபுரம் திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்கு நேரில் சென்று சந்தித்த போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் இவ்வாறு கூறினார்.




# மூதூர் திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்குள் பொலிஸார் அடாவடித்தனம் எனக் குற்றச்சாட்டு





**(எஸ்.கீதபொன்கலன்)**

நேற்று முன்தினம் மூதூர், இருதயபுரம் திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்குள் புகுந்த பொலிஸார், ஆலய உடைமைகளுக்கு சேதம் விளைவித்து, திருப்பலி பீடத்தில் காலணியுடன் ஏறி அதன் புனிதத் தன்மைக்கு ஊறு விளைவித்துள்ளார்கள் என்று ஆலய பதில் பங்கு குருவானவர் அருட்திரு.ஒகஸ்டின் கொன்பிசஸ் கூறினார்.

மேலும் இது பற்றி அவர் கூறுகையில் –

இருதயபுரம் மதுபானக் கடைத் திறப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதாகக் கூறி, தமது எதிர்ப்பையும் மீறி பொலிஸார் ஆலயத்திற்குள் பிரவேசித்து, பயத்தின் காரணமாகத் தஞ்சமடையிருந்த பொதுமக்களை அடித்துத் துன்புறுத்தி கைது செய்தனர் என்றார்.

இச்சம்பவமானது கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத உணர்வுகளை மிக மோசமான முறையில் பாதித்துள்ளது என்றும், எனவே இவ்விடயம் தொடர்பில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மூலம், இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் முறையீடு செய்ய உள்ளார் எனவும்,மேலும் ஜனாதிபதிக்கும் விடயம் தொடர்பில் அறிவிக்க உள்ளார் எனவும் கூறினார்.

# மூதூர் அராஜகங்களை கண்டிக்கின்றார் சுகாஷ்

மூதூரில் தமிழ் மக்களுக்கெதிராக அரங்கேறும் அராஜகங்களை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

மூதூர் மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டம் நடாத்திய மக்கள் மீது இரவோடிரவாகத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் பலர் கைது செய்யப்பட்டு உள்ளனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியாக மூதூர்ப் பொலிஸார் இரவு வேளைகளில் திட்டமிட்டு இந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இரவுவேளை என்பதால் ஆதாரமின்றி முறைகேடுகளில் ஈடுபடுவதும் அச்சுறுத்துவதும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட மனித உரிமை மீறலாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட மதுபானசாலை



மூடப்பட வேண்டும். – எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# இன்றும் அதிபர், ஆசிரியர்களின் சுகவீனப் போராட்டம் தொடரும்

அதிபர், ஆசிரியர்களின் சுகவீனப் போராட்டம் இன்றும் தொடர்கிறது என இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் தெரிவித்தவை வருமாறு:-

அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்காது, தமக்கு கிடைக்கவேண்டியதை கேட்கும் அதிபர், ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை நசுக்க, நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி, அதிபர், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடாத்திய ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து நாளைய தினம் 27 ஆம் திகதியும் அதிபர், ஆசிரியர்களின் சுகவீன விடுமுறைப் போராட்டம் தொடரவுள்ளது.

அதிபர்கள் ஆசிரியர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டிக்கும் விதமாக புதன்கிழமை போல் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வியாழனன்றும் (இன்றும்) ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். - என்று தெரிவித்தார்.




# அனைத்து அரச பாடசாலைகளும் இன்று வழமை போன்று இயங்கும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

அனைத்து அரச பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் இன்று வழமை போன்று இடம்பெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர், அதிபர்கள் இன்றைய தினமும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி, கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்றுப் போராட்டம் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது.

# தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதியால் 203 மில்லியன் டொலர் வருமானம்



தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதி மூலம் 203 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் முதல் காலாண்டில் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 6.9 வீத பங்களிப்பு தெங்கு உற்பத்திகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.



# ஹெரோயினுடன் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகு உரிமையாளர் கைது

200 கிலோவுக்கும் அதிக எடையுடைய ஹெரோயினுடன் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட மீன்பிடி கப்பலின் உரிமையாளர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 38 வயதான சந்தேகநபர் மாலைதீவுக்குத் தப்பிச்செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் 8.35 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மாலைதீவு நோக்கி செல்ல தயாராகவிருந்த விமானத்தில் பயணிக்கவிருந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தற்போது கொழும்பு போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் தலைமையகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, மேற்கு கடற்பரப்பில் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட நீண்டநாள் மீன்பிடி படகு காலி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட 6 பேரும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# கல்வியியற் கல்லூரிகளை ஒன்றிணைத்து தேசிய பல்கலையை உருவாக்க அனுமதி

நாட்டிலுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் இணைத்து கல்விக்கான தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுனர்கள் 3 வருடப் பயிற்சியின் பின்னர் தகுதியான ஆசிரியர்களாக ஆள்சேர்ப்புச் செய்யப்படுவர் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியாகுவோர், கல்வியியல்துறை இளங்கலைமாணி பட்டம் பெற்ற ஆசிரியர்களாக ஆள்சேர்ப்புச் செய்யப்படுவர்.

சர்வதேசக் கல்வித் தரத்தைப் பேணுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்காக, நாட்டிலுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் இணைத்து கல்விக்கான தேசிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 27.06.2024




இன்று அதிக பயணங்கள் காணப்படும். எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம். கவனக் குறைவு காரணமாக பணிகள் பாதிக்கப்பட வாய்ப்புள் ளது.

உறவில் இன்று புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இன்று மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைக் காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

மூட்டுக்களில் விறைப்பு அல்லது வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பயனுள்ள உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று சிறந்த வாய்ப்புகளை ஏற் படுத்திக் கொள்ள இயலும். எதிர்பாராத வகையில் கிடைக்கும் சொத்து உங்க ளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

கடின உழைப்பு வெற்றி பெற்றுத் தரும். உங்கள் முயற்சிக்கான பாராட்டு பெறுவீர் கள்.

நீங்கள் குடும்ப வட்டாரத்தில் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த திருப்தி கிடைக்கும்.

காப்பீடு மற்றும் பூர்வீகச் சொத்து வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கட்டுப்பாட்டுடன் பராமரிப்பது நல்லது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் சுறுசுறுப்பாக செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங களின் இனிமையான தகவல் தொடர் பின் மூலம் பலவற்றை சாதிப்பீர் கள்.

இன்று உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பனியின் இயல்பை விரிவுபடுத்தலாம்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்ப உறுபினர்களுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக் காது.




புனித மற்றும் ஆன்மீக யாத்திரைக்கு இது உகந்த நாள். ஏழைகளுக்கு உணவு அளித்தல் மற்றும் தொண்டு நடவ டிக்கைகள் மூலம் நன்மை பெறலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப் படுகின்றது. பணி சம்பந்தமான முக்கிய செயல்களில் தாமதங்களை எதிர்கொள்ள நேரும்.

குடும்ப பெரியோர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை பராமரிக்க அமைதியை மேற்கொள்வது நல்லது.

பண வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது நன்மை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் சிறந்த பலன் களை காண இயலாது. உங்கள் பணி களை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அகந்தை ப் போக்கின் காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பதற்றம் காரணமாக சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உடல் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு வெற்றி கிடைக் கும் நாள். புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை உருவாக்கிக்கொள் வீர்கள். இது உங்களுக்கு சிறந்த நாள்.

நீங்கள் உங்கள் பணிகளில் சிறப்பாக செயலாற்ற இயலும். கடினமான பணி களையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




இன்று அதிக பணிகள் காணப்படும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டி யது அவசியம்.

குடும்ப வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. குடும்ப உறுப்பினர்களிடையேகருத்து வேறுபாடு காணப் படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்கு வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




பலன்கள் இன்று உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். சுப காரி யங்கள் தள்ளிப் போகும்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் குறைவு. உங்கள் பணிகளை மேற் கொள்வதில் தாமதம் காணப்படும்.

உங்கள் வார்த்தைகள் மற்றவரை காயப்படுத் தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர் களிடையே மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.06.2024




இன்றைய நாளை இசை கேட்பது, தொண்டு செய்வது, தன தருமங்கள் செய்வது போன்ற ஆன்மீக காரி யங்களுக்கு பயன்படுத்துங்கள். இதனால் உங்களுக்கு மன ஆறுதல் மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும்.

பணியில் திருப்தி நிலை குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். தொழில் செய்ப வர்கள் தங்கள் செயல்களில் தாமதங்களை உணர் வார்கள்.

உங்கள் தாயுடன் புரிந்துணர்வு கொள்வதில் சில பிரச்சினை காணப்படும்.. இதனை தீர்த்து நல்லுறவை ஏற்படுத்துங்கள்.

இன்று சிறப்பான நிதிநிலைக்கு ஏற்ற நாள் அல்ல. இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்பட்டாலும் செலவு அதிகமாக இருக்கும்.




உங்கள் தவகல் தொடர்பு திறமை மூலம் சிறந்த பலன்களைக் காணலாம். உங்கள் திறமைகளை மேம்படுத்த இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மையாக மேற்கொள்வீர்கள். சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் வார்த் தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

உங்கள் வீட்டு பெரியவர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் மகிழ்ச்சி யை பராமரிக்க அனு சரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று அதிக பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை காண சேமிக்க வேண்டியது அவசியம்.

கண் எரிச்சல் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். நீங்கள் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப் படுகின்றது. தொழில் செய்பவர்கள் மிதமான பலன்களை காண்பார் கள்.

கருத்து வேறுபாடு ஒன்றின் காரணமாக உங்கள் நெருங்கிய உறவுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள் ளது.

இன்று மிதமான பண வரவு காணப்படும். சேமிப் பதற்கான வாய்ப்பும் இன்று குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள் வலி மற்றும் சளி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் சில விஷயங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். இதனால் உங்களின் பணிகளை முடிப்பதைக் கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. பணியில் சிறப்பாக செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் குழந்தை முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். குடும்ப உறுப் பினர்களுடன் அதிக நேரம் செலவு செய்வதால் அவர்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவு குறிந்து காணப்படும். பண இழப்பு ஏற்படா மல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.



